# ஆகஸ்ட் - 11- வெள்ளி

## புனித கிளாறா

**“என் பொருட்டு தன்னையே அழித்துக் கொள்பவர் எவரும் வாழ்வடைவர்’’ (மத்.16:25)**

## முதல் வாசகம் : இணைச்சட்டம் 4 : 32 – 40

உங்களுக்கு முற்பட்ட பண்டைக் காலத்தைப்பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். கடவுள், உலகில் மனிதனைப் படைத்த நாள் முதல், வானத்தின் ஒருமுனை முதல் மறுமுனை வரைக்கும் எங்காவது இத்தகைய மாபெரும் செயல் நடந்துண்டோ? அல்லது இதுபோல் கேள்விப்பட்டதுண்டா? நெருப்பின் நடுவிலிருந்து பேசிய கடவுளின் குரலொலியைக் கேட்டும், நீங்கள் உயிர்வாழ்ந்ததுபோல் வேறு எந்த மக்களினமாவது வாழ்ந்ததுண்டா?அல்லது, உங்கள் கடவுளாகிய ஆண்டவர் எகிப்தில் உங்கள் கண்முன்னே உங்களுக்குச் செய்த அனைத்தையும் போல, சோதனைகள், அடையாளங்கள், அருஞ்செயல்கள், போர், வலிய கரம், ஓங்கிய புயம் மற்றும் அச்சுறுத்தும் நிகழ்ச்சிகள் மூலம் ஓர் இனத்தை வேறொரு நாட்டினின்று தமக்கென உரிமையாக்கிக்கொள்ள முன்வரும் கடவுள் உண்டா?”ஆண்டவரே கடவுள், அவரைத் தவிர வேறு எவரும் இலர், என நீங்கள் அறிந்து கொள்ளும் படியாக இவை உங்கள் கண்முன் நிறைவேற்றப்பட்டன.நீங்கள் கற்றுக்கொள்ளும்படி வானினின்று வந்த அவர்தம் குரலை நீங்கள் கேட்குமாறு செய்தார்.தமது பெரும் நெருப்பை மண்ணுலகில் நீங்கள் காணச் செய்தார். அந்நெருப்பினின்று வந்த அவரது வாக்கை நீங்கள் கேட்டீர்கள்.உங்கள் மூதாதையர்க்கு அவர் அன்பு காட்டியதால், அவர்களுக்குப்பின் அவர்களுடைய வழிமரபினரைத் தேர்ந்து கொண்டார். எனவே அவரே முன்நின்று தமது பேராற்றலுடன் உங்களை எகிப்திலிருந்து கூட்டி வந்தார். உங்களை விட ஆற்றலும் வலிமையும் மிகுந்த வேற்றினத்தாரை உங்கள் முன்னின்று துரத்தவும், உங்களை அவர்களது நாட்டிற்குள் இட்டுச் சென்று இன்றும் உள்ளது போல், அதை உங்களது உரிமைச் சொத்தாகத் தரவுமே கூட்டி வந்தார். மேலே விண்ணிலும் கீழே மண்ணிலும் ஆண்டவரே கடவுள், அவரைத் தவிர வேறு எவரும் இலர்” என இன்று அறிந்து, உங்கள் உள்ளத்தில் இருத்துங்கள்.நான் இன்று உங்களுக்குக் கட்டளையிடும் அவரது நியமங்களையும் கட்டளைகளையும் பின்பற்றுங்கள். அப்பொழுது உங்களுக்கும், உங்களுக்குப் பின்வரும் உங்கள் பிள்ளைகளுக்கும் எல்லாம் நலமாகும். மேலும், உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்கு எக்காலத்திற்கும் கொடுக்கும் மண்ணில் நீங்கள் நெடுநாள் வாழ்வீர்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம் செயல்களை என் நினைவுக்குக் கொண்டு வருவேன்

## நற்செய்தி : மத்தேயு 16 : 24 - 28

அக்காலத்தில் இயேசு தம் சீடரைப் பார்த்து, ”என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்.ஏனெனில் தம் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவர். மாறாக என்பொருட்டுத் தம்மையே அழித்துக் கொள்கிற எவரும் வாழ்வடைவார்.மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? அவர் தம் வாழ்வுக்கு ஈடாக எதைக் கொடுப்பார்?மானிடமகன் தம் தந்தையின் மாட்சியோடு தம் வான தூதர்களுடன் வரப்போகிறார் அப்பொழுது ஒவ்வொருவருக்கும் அவரவர் செயலுக்கேற்பக் கைம்மாறு அளிப்பார்.நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் இங்கே இருப்பவருள் சிலர் மானிட மகனது ஆட்சி வருவதைக் காண்பதற்கு முன் சாகமாட்டார்” என்றார்.

**தியானம்:** என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும். (மத். 16:24) தன்னை அறிவதும் தன்னை ஏற்றுக் கொள்வதுமே ஆன்மீக வாழ்வின் தொடக்க படிகக்ற்களாக அமைகின்றன. நம்மைப்பற்றி நமக்கே தெரியாமல் இருப்பதே நமது மிகப்பெரிய பலவீனமான ஒரு நிலை. எமது வாழ்வில் ஏற்படும் சோதனைகள், சவால்கள் இன்ப துன்பங்களை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு வாழும்பொழுது எம்மை நாமே அறிந்து கொள்கின்றோம். குறிப்பாக இன்றைய நற்செய்தியில் “இழப்பில்தான் வாழ்வைக் காத்துக் கொள்ள முடியும்” என்பதை இறைமகன் இயேசு தெளிவுபடுத்துகின்றார். கிறிஸ்தவர்களாகிய நாம் எம்மை இழக்கும்பொழுது நாம் இயேசுவில் எம்மைக் காண்கின்றோம். எமது வாழ்வு பலன் அளிக்கும் வாழ்வாக இருக்க வேண்டும். ஏனென்றால் நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் கிறஸ்து சிலுவை மரணத்தின் வழியாக முடிவில்லாத வாழ்வை நமக்குக் கொடுத்துள்ளார். கிறிஸ்துவுக்காக அவர் அரசை இவ்வுலகில் நிலை நாட்டுவதற்காக கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்து பலனளிப்பதுபோல நாமும் நம்முடைய பாவச்செயல்களை மண்ணில் மடியச்செய்து புதுநிலை மக்களாக வாழ்வோம்.